14th February 1955] [Sri K. R. Sambandam]

வைத்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருப்பவர்கள் ஏதோ இரண்டு பேரை வைத்துக்கொண்டு சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுகிறார்கள். ஆகையால் ஏற்கெனவே இருந்துவரும் சட்டத்தில் ஒரு விதிவிலக்கு அளிப்பது அவசியம், நியாயம். இந்தவிதமான நிர்ப்பந்தம் ஏற்பட்டால்தான் 5, 6 பேர்கள் இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும், இந்தச் சட்டத்தின் பிரகாரம் பல முதலாளிகள் வரியைக் கொடுக்காமல் தப்பித்துக்கொள்ளலாம். இந்த மாதிரியாக இவர்கள் நடப்பதால்தான் நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் இருந்துக்கொண்டு வருகிறது. அவர்கள் தங்களின் ஆட்களுக்கு கொடுக்கும் சம்பளமோ மிகமிகக் குறைவு. சரியான சம்பளத்தை நிர்ணயம் செய்வதில்லை, அவர்களுக்கு விடுமுறை கிடையாது. இது போன்ற அநீதிகளை இந்தச் சின்னக்கடைக்காரர்கள் இழைத்து வருகிறார்கள். ஆதலால்தான் அவர்களின் வேலை நேரத்தின் நிர்ணயமும், நியாயமான சம்பளமும், விடுமுறை அளிப்பது முதலிய பாதுகாப்பும் ஏற்படக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தி அவர்களுக்கு நன்மையைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.''

Presentation of petitions to the Assembly.

SRI M. KALYANASUNDARAM :—'' Sir, I have got some petitions. May I present them now? ''

MR. SPEAKER :—'' The hon. Member may give them to the Secretary.''

(Sri Kalyanasundaram then presnted the petitions to the Joint Secretary to the Legislature.)

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM** :—'' இந்த விவாதத்தை நான் வரவேற்கிறேன். இதை அனுமதித்த தங்களுக்கும் நான் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். ஏனெனில், 1947-ம் வருஷத்திய ஷாப் அண்டு எஸ்டாபிளிஷ்மெண்ட் சட்டத்திலிருந்து விலக்கு அளிப்பது என அரசாங்கம் எடுத்த முடிவைப்பற்றி பல குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டு வருவதை நானும் அறிந்திருக்கிறேன். அதுமட்டுமல்ல. எதிர்க்கட்சி உதவி தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, எனக்குக்கூட பல தந்திகள் வந்திருக்கின்றன. அதாவது, 1947-ம் வருஷத்தில் மெட்ராஸ் ஷாப் அண்டு எஸ்டாபிளிஷ்மெண்ட் சட்டத்திலிருந்து விதிவிலக்கு செய்யக்கூடாதென்று கடை குமாஸ்தாக்களும் மற்ற தொழிலாளர்கள் பலரும் எனக்குப் பல தந்திகள் அனுப்பியிருக்கிறார்கள். எனினும், அரசாங்கம் அந்த முடிவுக்கு ஏன் வந்தது என்பதை அவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் விளக்குவதற்கு இந்தச் சந்தர்ப்பம் ஏற்பட்டதை நான் வரவேற்கிறேன். 5-44 p.m.

'' அரசாங்கம் அந்த முடிவுக்கு வந்ததிலிருந்து ஏதோ அரசாங்கத்தின் தொழில் கொள்கையே தவறுதலாகப் போய்விட்டது, அல்லது மாறி விட்டது, அல்லது ஏதோ தெரியாமல் 1947-ம் வருஷத்திலே அப்பொழு திருந்த அரசாங்கம் அதைச் செய்துவிட்டது, இப்பொழுது அதிலிருந்து எப்படிப் பின் வாங்குவது என்று இந்த அரசாங்கத்தார் பார்க்கின்றார்கள் என்றெல்லாம் எதிர்க்கட்சியினர் சொல்லக்கூடிய தோரணையிலேயே குறைகள் சொல்லப்பட்டன. அதுவும் எதிர்க்கட்சி உதவித் தலைவர் பேசும்போது நெய்வேலி பற்றிய விஷயத்தை எடுத்துக்கொண்டார்கள். எந்த விவாதத்திலும் அதைப்பற்றி அவர் வழக்கமாகக் குறிப்பிடுவது போல் இதிலும் அவ்விஷயத்தைக் கொண்டுவந்தார்கள். அவருக்கு அதில் ஒரு பிரமை என்றுதான் சொல்லவேண்டும். அவர்களுக்குத்தான் அவ்விஷயத்தில் ரொம்பக் கோபம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லவேண்டும். ஏனென்றால் தங்கள் கட்சியின் பலத்திற்காக அவ்விஷயத்தை பயன் படுத்திக்கொள்ளலாம் என்று பார்த்து, அது முடியாமற்போகவே அதனால் அவருக்குத்தான் கோபம் ஏற்பட்டிருக்கலாம். எனக்கு என்ன கோபம் ? அதில் எனக்கு வருத்தந்தான், கோபமில்லை.

" ஏனென்றால் இந்த நாட்டுக்கும் இந்த நாட்டிலுள்ள மக்களுக்கும் பெரிய அளவில் உதவக்கூடியதும், அவர்களுடைய பொருளாதார நிலைமையை உயர்த்தக்கூடியதுமான இம்மகத்தான நெய்வேலி திட்டத்தை சர்க்கார் நிறைவேற்றும்போது ஒரு சிலர் அதை **sabotage** செய்யப்பார்க்கிறார்களே, அதுவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள, பொறுப்புள்ள அங்கத்தினர்களே அந்த நாச வேலைக்குத் தெரிந்தோ, தெரியாமலோ ஆதரவு அளிக்கிறார்களே என்பதை நினைக்க நான் வருத்தப்படுகிறேன். அந்த வருத்தத்துடன்தான் நான் அன்று பேசினேனே தவிர கோபத்தோடு ஒன்றும் பேசவில்லை.

" இப்பொழுது இந்த ஷாப் அண்டு எஸ்டாபிளிஷ்மெண்ட் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்திருப்பதைப்பற்றி கனம் எதிர்க்கட்சி உதவித் தலைவர் குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டத்தின் 6-வது ஷரத்திலே அரசாங்கத்திற்கு இந்தச் சட்டத்தின் விதிகளிலிருந்து விலக்கு அளிப்பதற்கு ஏற்கெனவேயே உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அம்மாதிரி அரசாங்கத்திற்கு விதிவிலக்கு அளிக்கக்கூடிய ஷரத்து அந்தச் சட்டத்தில் போடப்பட்டிருக்கிறதென்பதற்காக இப்பொழுது நாங்கள் விதிவிலக்கு அளித்திருக்கிறோம் என்று சொல்லவில்லை.

" கடைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள், குமாஸ்தாக்கள் ஆகிய எல்லோரும் இந்தச் சட்டத்தைப் பெரிதும் வரவேற்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இந்தச் சட்டத்தினால் பலன் அடைகிறார்கள், பலன் அடைய நினைக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். அவர்கள் பேரில் என்னைப் பொறுத்தவரையில் அனுதாபம் இல்லாமலில்லை.

" ஆனால், இந்தச் சட்டம் அமுலிலுள்ள பிரதேசங்களில் இருக்கின்ற, மேஜர் பஞ்சாயத்துக்களாக இருந்தாலும் அவற்றிலுள்ள கிராமங்களில் இருக்கின்ற சிறிய கடைகள் வைத்திருப்பவர்களை நாம் பெரிய முதலாளிகளெனக் கருதமுடியாது. அவர்களும் அனுதாபத்திற்குரியவர்கள் என்று பலர் உணர்வார்கள். அபிப்பிராயமும் அதுதான். சிறிய கடைகளை, வெற்றிலைப் பாக்கு கடை, சோடா கடை போன்றவைகளைவைத்து நடத்துகின்றவர்களைப் பெரிய முதலாளிகளாக பாவிக்கமுடியாது."

SRI M. KALYANASUNDARAM :—" சிறிய கடைகளை வைத்து தாங்களே நடத்தக்கூடியவர்களை இந்தச் சட்டம் பாதிக்காது என்பது மந்திரி அவர்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். ஆகவே, சிறிய கடைக்காரர்களைக் காட்டி அவர்கள் பேரில் அனுதாபம் கொண்டு இந்த விதி விலக்கை அளித்திருப்பதாக கனம் மந்திரி அவர்கள் சமாதானம் சொல்ல வேண்டாமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

*THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"அது எனக்குத் தெரியாமல் இல்லை. மூன்று பேர்களுக்கு மேல் ஆட்களைப் போட்டு நடத்த முடியாதிருக்கின்ற கடைகளையும்கூட நாம் பெரிய கடைகளாகக் கருத முடியாது. அந்தக் கடைகளை வைத்து நடத்துகின்றவர்களையும் நாம் பெரிய முதலாளிகளாகக் கருதக்கூடாது. தொழிலாளிகளிடம் நமக்கு அனுதாபம் இருப்பதைப்போலவே, அவ்வளவு அனுதாபம் சிறிய கடைகளை வைத்து நடத்துகின்றவர்களிடம் இல்லாவிட்டாலும், ஏறக்குறைய அதில் கொஞ்சம் அனுதாபமாவது அவர்களிடம் நமக்கு இருக்கவேண்டும். அந்தச் சிறிய கடைக்காரர்கள் செய்வதும் ஒரு பெரிய சேவை. ஏனென்றால், அந்தந்த கிராமத்திலுள்ள மக்களின் தேவைக்கு வேண்டிய சாமான்களை அவர்கள் அக்கறையோடு அந்த கிராமத்திலுள்ள மக்களுக்குக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, மக்களுக்கு வேண்டிய சாமான்களைக் கொடுத்து வருகின்ற இந்தச் சிறிய கடைகளும்கூட பெருகவேண்டும் என்பது என்னுடைய அவா. அதுவே அரசாங்கத்தின் அவாவும். இம்மாதிரி சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து இந்தச் சிறிய கடைகள் அதிகம் பெருக முடியாது போய்விட்டது என்பது எங்களுக்குத் தெரிந்த தகவலிலிருந்து அறிந்தோம். சிறிய கடைகள் கிராமங்களில் அதிகம் பெருகினால்தான்

14th February 1955] [Sri M. Bhaktavatsalam]

மக்களுக்கு, குறிப்பாக ஏழை ஜனங்களுக்கு அதிக உபயோகமாக இருக்கும். ஆனால், சிறிய கடைகளே அதிகம் பெருகவில்லை. ஆகவே, ஒரு பக்கத்தில் இப்படிப்பட்ட சிறிய கடைகள் பெருகவேண்டும் என்பதற்காக இந்தச் சட்டத்திலிருந்து ஏதாவது விதிவிலக்கு செய்யலாமா என்ற யோசனை அரசாங்கத்திற்கு இருந்துவந்தது.

" மற்றும் எதிர்க்கட்சி உதவித் தலைவர் சொன்னதுபோல் அல்லது வேறு ஒரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல் போதுமான உத்தியோகஸ்தர்கள் இல்லாததால் சரியானபடி இந்தச் சட்டம் அமுல் செய்யப்படவில்லை என்ற புகார்களும் வந்தன என்று சொன்னார்கள். அது உண்மை. எல்லாக் கடைகளையும் மேற்பார்வை செய்வதற்குப் போதுமான உத்தியோகஸ்தர்களை நியமிப்பதென்றால் அரசாங்கத்திற்கு ஏராளமாகப் பணம் செலவாகும். போதிய உத்தியோகஸ்தர்கள் இல்லையென்றாலும் இந்தச் சட்டம் சரிவர அமுல் செய்ய முடிகிறதா என கவனிக்க முடியாமல் போகிறது. அதோடு மற்ற துறைகளில் சொல்லப்படுவதுபோல் இருக்கிற உத்தியோகஸ்தர்களைப்பற்றியே அனாவசியமாக அவர்கள் தொல்லை கொடுக்கிறார்கள் என்ற புகாரும் அரசாங்கத்திற்கு வருகிறது. அதிகாரிகளால் இந்தச் சிறிய கடைகளிலே தவறுதல் நடந்தது என்ற காரணத்திற்காக ஏராளமான பிராசிக்யூஷன்கள் போடப்பட்டன. அம்மாதிரியாக பிராசிக்யூஷன் போடப்பட்டதே தவிர அவைகள் விசாரணைக்கு வந்தபோது அவற்றை நல்ல முறையில் நடத்தி ருசிப்பிக்க முடியாததால் குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க முடியாமல் போய்விட்டது. அதனால் வழக்குகள் தள்ளப்பட்டன. ஆகவே இதையெல்லாம் வைத்துக்கொண்டுதான் பொதுவாக அந்தந்த பிராந்தியங்களிலுள்ள பொது மக்களுடைய அபிப்பிராயம் என்னவென்று தெரிந்துகொள்ளவேண்டுமென்று அரசாங்கம் முதல் வகுப்புப் பஞ்சாயத்துகளிடமும், முனிசிபாலிடிகளிடமும் அவர்களுடைய அபிப்பிராயங்களை தெரிவிக்கும்படி சர்க்கார் கேட்டார்கள். இதற்கு 44 முனிசிபாலிடிகளும், 69 முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்களும், "இம்மாதிரி விதிவிலக்குக் கொடுப்பது சரி" என்று ஆதரித்து அபிப்பிராயம் தெரிவித்தார்கள். ஆறு முனிசிபாலிடிகளும், 19 முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்களுமே 'இது வேண்டாம்' என்று அபிப்பிராயம் தெரிவித்தார்கள். மற்றவர்கள் சர்க்கார் புரிந்துக்கொள்ளக்கூடிய வகையில் எந்தவிதமான அபிப்பிராயமும் தெரிவிக்கவில்லை. ஆகவே, பெரும்பாலானவர்களுடைய அபிப்பிராயத்தின்பேரில்தான் இந்த 'நோட்டிபிகேஷன்' பிரகடனம் செய்யப்பட்டது.

" இம்மாதிரி விதிவிலக்கு அளித்திருப்பதை வைத்துக்கொண்டு ஒரு சிலர் தவறு செய்யலாம். அந்தச் சலுகையை துஷ்பிரயோகம் செய்யலாம். 5-50 p.m. ஆகவே அதைத் தடுப்பதற்காகவே சில பிரத்யேக ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அதாவது, அதிகாரிகளை ஏமாற்றுவதற்கு இடமில்லாமல் அந்தச் சிறிய கடைக்காரர்களும்கூட 'விசிட் புத்தகம்' என்ற ஒரு புஸ்தகம் வைத்துக்கொள்ளவேண்டும். அதை அப்போதைக்கப்போது இன்ஸ்பெக்டர்கள் போய்ப்பார்ப்பார்கள். கடையில் ஏதாவது தவறு நடந்திருந்தால் அதற்கான நடவடிக்கைகளும் அந்தக் கடைக்காரர்கள் மேல் எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற ஒரு ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது."

SRI M. KALYANASUNDARAM :—" கடையில் ஐந்து பேர்கள் வேலை செய்கிறார்களா அல்லது மூன்று பேர்கள் வேலை செய்கிறார்களா என்பதை தெரிந்துகொள்வதற்குத்தான் அந்தப் புஸ்தகம் இருக்கிறது."

*THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" மேலும் இந்த விதிவிலக்கு ஒரு வருஷத்திற்குத்தான் அமுலில் இருக்கும். அந்த ஒரு வருஷத்தில் ஏற்படுகின்ற அனுபவத்தைக்கொண்டு, இந்த விதிவிலக்கு இருக்கவேண்டியது அவசியமா இல்லையா என்பதை நிரந்தரமாக முடிவு செய்யலாம் என்பதே அரசாங்கத்தின் எண்ணம். ஆகவே விலக்கை ஒரு வருஷத்திற்குத்தான் பிரயோகித்திருக்கின்றோம். இந்த ஷாப் அசிஸ்டெண்ட் சட்டத்திலே பல வகைகளில் குறைகள் கூறப்படுகின்றன."

[14th February 1955

SRI N. K. PALANISAMY :—" இந்த ஷாப் எஸ்டாபிளிஷ்மெண்ட் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்திருப்பதற்கு முக்கிய காரணத்தை கனம் மந்திரி அவர்கள் சொல்லவில்லை. இந்தச் சட்டம் அமுலில் இருப்ப தினால் சிறிய கடைகளுக்குள்ள வியாபாரம் குறைவதாகவும் அதனால் சர்க்காருக்கு வருகின்ற வருமானம் குறைந்து போகின்றது என்ற காரணத் திற்காகவும்தான் கடைகளில் வேலை செய்கின்ற தொழிலாளிகளும், குமாஸ் தாக்களும் பலியிடப்பட்டிருக்கிறார்கள். சென்ற தீபாவளிக்கு முன்பாக ஒரு சிலர் இதுபற்றி கனம் மந்திரியிடம் தூது வந்ததும் அவர்களுக்காக வேண்டி இந்தச் சட்டத்திலிருந்து உடனடியாக சர்க்கார் விதிவிலக்கு அளித் திருக்கிறார்கள் என்பதும் உண்மையில்லையா ? கனம் மந்திரி அவர்கள் விதிவிலக்கு அளித்திருப்பதற்கான உண்மையான காரணங்களைச் சொல்ல வேண்டுமென்றும் மறைத்துப் பேசுவதில் பிரயோஜனமில்லையென்றும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

* THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"நான் சொல்வதெல்லாம் உண்மையான காரணங்கள்தான். எனக்குத் தோன்றுகிற காரணங்களைத் தான் சொல்கிறேன் .கனம் அங்கத்தினர், விசேஷமாக ஒன்றும் பேசிவிட வில்லை, அதைக் குறிப்பிட்டு நான் பதில் சொல்வதற்கு.

" நான் ஏற்கெனவே இந்த விதிவிலக்கு ஒரு வருஷத்திற்கு அளிக்கப் பட்டிருக்கிறதென்று சொன்னேன். அந்த ஷாப் சட்டத்தில் பல குறை பாடுகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அந்தக் குற்றங் குறை களையெல்லாம் ஆராய்ந்து அதைத் திருத்த ஒரு மசோதாவைக்கொண்டு வந்து அதை நிறைவேற்ற எதிர்க்கட்சி உதவித் தலைவர் முற்பட்டிருக்கிறார். மத்திய அரசாங்கமும் இந்தச் சட்டத்தை தாங்களாகவே ஒரு மத்திய சட்டமாகச் செய்யப்போவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதை எப்பொழுது செய்யப்போகிறார்களோ தெரியாது. இருந்தாலும் மத்திய அரசாங்கமே அந்தச் சட்டத்தை கொண்டுவருகிறதா என்று பார்க்கலாம் என்றுதான் நமது அரசாங்கம் இதுவரையில் ஒரு திருத்தமும் அந்தச் சட்டத்திற்குக் கொண்டு வராமலிருக்கிறது. ஆனால், சிறிய கடைகளை வைத்துக்கொண்டிருக்கின்றவர்கள் இந்த விலக்கில்லாமல் தங்களுடைய கடைகளை நடத்த முடியாது. அதனாலேயே அதிகமாக சிறிய கடைகள் பெருகவில்லை என்று சொன்னேன். சிறிய கடைகளின் எண்ணிக்கை பெருகவேண்டும் என்பதில் சர்க்காரும் அதிக ஆவலுள்ளவர்களாக இருப்பதால் இந்த விதிவிலக்கை அளித்தார்கள். ஆனால் ஒரு வருஷத் திற்குப் பிறகு இதைப் புனராலோசனை செய்யவேண்டுமென்றும், இந்த ஒரு வருஷத்தில் ஏற்படுகின்ற அனுபவத்தைக்கொண்டு இந்த விலக்கு வேண்டுமா வேண்டாமா என்று நிரந்தரமாக செய்யலாமென்றும் சர்க்கார் தீர்மானித்தது என்று நான் சொன்னேன். ஆனால், இந்த விதிவிலக்கி னால் பல வகைகளில் தொழிலாளர்கள், குமாஸ்தாக்கள் ஆகியவர்களுக்கு ஏற்பட்டிருந்த வசதிகள் பறிக்கப்படுகின்றன என்று புகார்கள் கூறப்படு கின்றன. தொழிலாளர்களுடைய வசதிகள் பறிக்கப்படவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. ஆனால், சிறிய கடைகளை நடத்து கின்ற சிறிய வியாபாரிகளுக்கும் வசதி இருக்கவேண்டும், அப்பொழுதே சிறிய கடைகள் பெருகும் என்பதும் அரசாங்கத்தின் எண்ணம்.

" கனம் அங்கத்தினர் ஸ்ரீ கே. பி. கோபாலன் அவர்கள் பேசும்போது சிற்சில வசதிகளைப்பற்றி குறிப்பிட்டார். அதைப்பற்றி நான் விவரி த்துச் சொல்லவேண்டியதில்லை. இந்த நோட்டிபிகேஷன்படி டிசம்பர் மாதத்திலிருந்து ஒரு வருஷம் வரையில் இந்த விதிவிலக்கு அமுலில் இருக்கும் என்றாலும் அதற்குள்ளேயே சில வசதிகளையாவது மீண்டும் அந்தத் தொழிலாளர்களுக்கு அளிக்கலாமா என்று நான் பரிசீலனை செய் கிறேன். சில வசதிகளுக்கு இந்த விலக்கை எடுத்துவிட முடியுமா என்று பார்த்து எல்லோருக்கும் எது நலன் தருமோ அதுவும் குறிப்பாக, தொழி லாளர்களுக்கு எது நலன் தரக்கூடியதாகத் தோன்றுகிறதோ அதையும் பார்த்து நாங்கள் சட்டத்தையே திருத்தப் பார்க்கிறோம் என்று சொல்லி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்."

14th February 1955]

***Sri M. KALYANASUNDARAM** :—" கனம் மந்திரி அவர்கள் நெய்வேலியைப்பற்றி நான் குறிப்பிட்டதைப்பற்றி சொன்னார். எங்களுடைய கட்சியைப் பலப்படுத்துவதற்கு நாங்கள் அங்கு முயற்சி செய்தோம், அது முடியவில்லை, அதற்காக எனக்கு கோபம் இருக்குமென்று சொன்னார். நான் கோபப்படவில்லை. அவர்கள் கோபப்பட்டு சொன்னபோதுகூட நான் பொறுமையுடன்தான் சபையில் இருந்திருக்கிறேன். எங்கள் கட்சி தோற்றுப்போனாலுங்கூட பரவாயில்லை. நெய்வேலித் திட்டம் நன்றாக உருவாகி, பலனளிக்கவேண்டும் என்பதே கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அபிப்பிராயம், என்னுடைய அபிப்பிராயமும்கூட என்பதை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

" அதோடு அங்கிருக்கக்கூடிய நிலைமையைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் கூறும்போது, யாரோ அவர்கள் செய்யும் நல்ல காரியங்களைச் சாபடேஜ் செய்வதாக குறிப்பிட்டார். அப்படிப்பட்ட நாச வேலைகளைச் செய்வது தொழிலாளர்கள் அல்ல. திட்டத்தை நல்லபடி நிறைவேற்றவேண்டுமென்றே தொழிலாளிகள் நினைக்கிறார்கள். நாச வேலையைச் செய்பவர்கள் அதிகாரிகள் தான். அதிகாரிகள் சொல்லியபடி தவறான விஷயங்களை கேட்டுக்கொண்டுதான் கனம் மந்திரி அவர்கள் கோபப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் என்னுடைய பேச்சு அன்றைக்கு அவருக்கு அப்பேர்ப்பட்ட கோபத்தை உண்டாக்கியிருக்கவே முடியாது. அவர் மனதில் ஏதோ சில காரணங்களை வைத்துக்கொண்டுதான் அப்படிக் கோபப்பட்டிருக்கிறார். அதற்கு அவசியமில்லை. இருந்தாலும், எங்கள் பேரில் வேண்டுமானாலும் அவர் தன்னுடைய கோபத்தைக் காட்டிக்கொள்ளட்டும், தொழிலாளர்கள் பேரில் கோபத்தைக் காட்டவேண்டாம் என்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

Mr. SPEAKER :—" I adjourn the House till 11 a.m. to-morrow."

The House then adjourned.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

LIBRARY
17 MAR 1956
STATE LEGISLATURE, MADRAS